## மாநகராட்சி பள்ளி சுவரில்

# மெட்ரோ ரெயில் ஓவியம் தீட்டிய தலைமை ஆசிரியை - ஓவியர்களுக்கு பாராட்டு!

சென்னை, அக். 20—

சென்னை பெருநகர மாநகராட்சி தொடக்கப்பள்ளி சுவரில் மெட்ரோ ரெயில் ஓவியம் தீட்டியதற்காக தலைமை ஆசிரியை மற்றும் ஓவியர்கள் கவுரவிக்கப்பட்டனர்.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் எப்போதும் நிலையான மற்றும் திறமையான போக்குவரத்து முறையையும், சென்னை பொதுமக்களின் நலனுக்காக பல தனித்துவமான வசதிகளையும் வழங்கி வருகிறது. சென்னை எண்ணூர், அன்னை சிவகாசி நகரில் உள்ள சென்னை பெருநகர மாநகராட்சி தொடக்கப்பள்ளி சுவரில் மெட்ரோ ரெயில் போன்று ஓவியம் வரைந்துள்ளனர். பள்ளி அலுவலக அறை மெட்ரோ ரெயில் நிலையம் போன்றும், வகுப்பறைகள் மெட்ரோ ரெயில் பெட்டிகள் போன்றும், வகுப்பறை வாசல்கள் மெட்ரோ ரெயில் பெட்டியின் நுழைவு வாயில்கள் போன்றும் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. சமீபத்தில் இது சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் கவனத்திற்கு வந்தது. சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ் பள்ளியின் தலைமை ஆசிரியை த.வெற்றிச் செல்வி, ஒப்பந்தாரர் பி.சரவணகுமார் மற்றும் ஓவியப்பணி மேற்கொண்ட ஜே.சுரேஷ்பாபு ஆகியோரை கவுரவித்து வெகுமதி மற்றும் நற்சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜீவ் நாராயண் திவேதி மற்றும் தலைமைப் பொது மேலாளர் ஜி.ராஜரத்தினம் ஆகியோர் உடன் இருந்தனர்.